ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

भग्नाशस्य करण्डपिण्डिततनोर्म्लानेन्द्रियस्यक्षुधा
कृत्वाखुर्विवरं स्वयं निपतितो नक्तं मुखे भोगिनः ।
तृप्तस्तत्पिशितेन सत्वरमसौ तेनैव यातः पथा
स्वस्थास्तिष्ठथ दैवमेव हि परं वृद्धौ क्षये कारणम् ॥

பாம்பாட்டியால் பிடிக்கப்பட்டு ஒரு பெட்டியில் சுருட்டிவைத்துக் கட்டப்பட்டதாயும், பசியால் குறைவடைந்த இந்திரிய சக்தியையுடையதாயும், இனி நாம், ஜீவிக்கப் போகிறதில்லை என்று குன்றிய ஆசையையுடையதாயுமிருக்கும், ஓர், ஸர்ப்பத்தினுடைய முகத்திற்கு நேராக, இரவில், அப்பெட்டியில் உணவிருக்கென்று, அதை, எடுத்து சாப்பிடவேண்டி ஒரு எலியானது, பெட்டியை அறுத்து உட்செல்லும்பொழுது பாம்பின் வாயில் புகவே, அதை சாப்பிட்டு, பசிதீர்ந்து, களையும் நீங்கி, எலி வந்தவழியால், சுகமாய் அப்பாம்பு, வெளியில்போய் விட்டது ஆகையால் நம்முடைய. சிரேஸ்யஸிற்கும், குறைவிற்கும், தெய்வமே காரணமென்றெண்ணி கவலையையடையாமலிருக்கவேண்டும்."

பாம்பானது, தான் ஜீவிப்போமென்று அற்பங்கூடக் கருதவில்லை. எலிக்கும், நாம், பாம்பிற்கு, இரையாவோமென்கிற எண்ணம் கொஞ்சம்கூட இல்லை. அவ்விதமிருந்தும், இவ்விரண்டுகளின் அபிப்பிராயத்திற்கு, நேர் விரோதமாய்க் காரியம் முடிந்திருக்கிறது. இதைக்கவனித்தால், நம்முடைய முயற்சியால், எவ்விதக்காரியங்களையும், நம்மிஷ்டம்போல் முடித்துவிடலாமென்கிற, அகங்காரத்தை நாம் அடையக்கூடாதென்று நிசசயமாய்த் தெரிகின்றது."

திருவிசலூர் ஸம்ஸ்கிருத வித்யாசாலே.

கும்பகோண நகரத்திற்கு கிழக்கே சுமார் 5மைல் தூரத்தில், பல பண்டித சிரேஷ்டர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவிசலூர் என்கிற ஓர் கிருமம் காவிரியின் வடகரையில் விளங்கி வருகின்றது. இவ்வூரில் ஸ்ரீதரவெங்கிடேசுவரர் (அய்யாவாள்) என்று பெயர்பூண்ட வோர் சிவபக்தசிகாமணி வசித்துவந்தார். அம்மஹான் தம்முடைய இல்லத்தின் பின்புறத்திலுள்ள ஓர் கிணற்றில், கங்கையை, கொஞ்சகாலத்திற்கு முன் வரவழித்தாரென்பது மிகவும் பிரசித்தமானது. தற்காலமும், ஒவ்வொரு ஆண்டிலும் அந்தகங்கை தோன்றிய தினமாகிய கார்த்திகை மாதத்து அமாவாஸைதினம் பல விடங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து அக்கங்கையில் ஸ்நாநம்செய்து, அன்றுநடக்கும் பிராமண சமாராதனைகளையும், பக்தகோஷ்டிகளால் நடத்தப்படும் ஸ்ரீபகவத் கதாப்பிரசங்கங்களையும், மற்றுமுள்ள சங்கீதகச்சேரிகளையும் பார்த்தும் கேட்டும், அனுபவித்தும் ஆனந்தித்தும் வருகிறார்கள். பின்னும் இவ்வூரில் சகல சாஸ்திரங்களையும் முற்றுணர்ந்தவரும், மிக்க பிரஸித்தி பெற்றவரும், மஹாராணியால் ஆதரவுடன் அளிக்கப்பட்ட மஹா மஹோ பாத்தியாயர் என்கிற பிருதால் அலங்கிருதரும், பிறரிடமிருந்து ஒருவிதமான பிரயோஜனத்தையும் எதிர்பாராது தன்னிடம் வந்த சிடர்களுக்கு வித்யாதானம் பிரியமாய்ச் செய்தவருமான, பிரம்மஸ்ரீ இராமசுப்பிரமணிய சாஸ்திரிகள

இத்தருணத்தில் இப்பாடசாலைசரியாய் நடைபெறவில்லையென்றும் இந்த தர்மத்தையேற்படுத்திய மூலபுருஷனுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமின்றி சரியாக நடைபெறும்படி செய்ய வேண்டு மென்கிற எண்ணங்கொண்டவரும், இவ்வூர் வாஸியாயிருந்து தற்காலம் மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜியில் பிரின்சிபால் ஸ்தானத்தைவகித்து, வித்தியார்த்திகளுக்கு வித்யா தானம்செய்து வருபவருமான பிரம்மஸ்ரீ வெங்கடசுப்பாசாஸ்திரிக ளவர்கள், உத்தமமான பெரியதர்மத்தை தம்மாலியன் வரையில் விருத்திசெய்ய வேண்டுமென்று இதில் சிறிது முயற்சி எடுத்துக்கொண்டார்கள். தற்காலம் ஹிந்துக்களுடைய ஸநாதன தர்மத்தையும், உத்தமமான மதத்தையும் அடியோடுபிடுங்கி எடுத்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு முன் வந்திருக்கும் கனவான்கள் பலர் இருப்பினும், அவர்களுக்குள் பரம்பரையாய் ஆஸ்திகர்களும், வைதிகமதத்தில் விசேஷமான அபிமானமுள்ளவர்களும், நம் சாஸ்திரங்களையும் தர்மங்களையும், தம்மாலியன்றவரையில் ஒருவிதமான சிரமத்தையும் பெரிதாகக்கருதாமல் அபிவிருத்தி செய்ய வேண்டு மென்கிற இயற்கையாயுள்ள பக்தி சிரத்தையால் தாங்கள் நடத்துவதோடு, நடத்துகிறவர்களுக்கும் தங்களா லியன்றவரையில் நற்காரியங்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற அவ்யாஜமான எண்ணங்கொண்ட சிலதார்மிகர்களான கனவான்களுடைய ஆதரவின்பேரில் பிரம்ம ஸ்ரீசாஸ்திரிகளவர்கள், இதை ஏற்படுத்திய மூலபுருஷரின் அபிப்பிரா யானுசாரம் இந்த தர்மத்தை நடைபெறச் செய்வதற்கான சௌகரியங்களைப் பெற்றூர்கள். உடனே, தர்மகாரியமா யிருந்தாலும், அதில் பிரவேசிக்கின், சரியாக நடைபெறுமோ, நடைபெறாதோ வென்றும், இது சாத்தியமாவென்றும் சந்தேகங்கொண்ட பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்கள், இந்தக்காரியத்தில் தைரியமாய் முன்வந்து காரியங்களை நடத்தவே.

नहि कल्याणकृत् कश्चिद्दुर्गतिं तात गच्छति ॥

ஓர் மஹானால் கூறப்பட்ட லோக க்ஷேமகரமான காரியத்தில் பிரவேசிப்போர்களுக்கு ஒருக்காலும் இடையூறு நேராதென்கிற சாஸ்திரார்த்தத்திற் கிணங்க அவர்களிஷ்டப்படி, ஸ்ரீபகவத்கிருபையால் பூர்த்தியாகி ஷை-வித்யாசாலையை நன்றாய் ஜீர்ணோத்தாரணம் செய்து சென்ற பங்குனிமீ 19உ (1-4-23) தேதி சுப முகூர்த்தத்தில் கிரகப்பிரவேசம் செய்தார்கள். அக்காலத்தில் பிரம்மஸ்ரீ கே. சுந்தராமய்யரவர்கள்; காலேஜ் பிரின்ஸ்பால் மகா-ள-ள-ஸ்ரீ ராஜகோபாலய்யரவர்கள், ராவ்பஹதூர். S. அப்புசாஸ்திரிகளவர்கள், பிரம்மஸ்ரீ ஹைகோர்ட்டுவக்கீல் கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள், ஸ்ரீரங்கம் டி. கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள், மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்சிபால் பிரம்மஸ்ரீ வெங்கட சுப்பாசாஸ்திரிகளவர்கள், கும்பகோணம் வக்கீல் C. H. வெங்கட்டராம சாஸ்திரிகளவர்கள், கும்பகோணம் ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள், ஷையூர் வக்கீல் ஜி. வெங்கட்ட ராமய்யரவர்கள் முதலான பல பெரியோர்களும், உள்ளூர், திருவிடமருதூர் வாஸிகளான அசேஷ மஹாஜனங்களும் சுமார் நானூறுபேர்கள் வரையில் கூடியிருந்தார்கள். பிரம்மஸ்ரீ K. சுந்தராமய்யரவர்கள் பெரியோர்களின் பிரார்த்தனையை யங்கீகரித்து அக்கிராஸனம் வகித்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ G. H. வெங்கட்ட ராம சாஸ்திரிகளவர்கள், இந்தபாடசாலையாரால், எச்சமயம் ஏற்படுத்தப்பட்ட தென்பதையும் அது நடந்தவிபரங்களையும் தற்காலம் நேர்ந்த மாலிந்யத்தையும்பற்றி சுமார் 40நிமிஷம் உபந்யஸித்து முடிவில் இது சரியாக நடைபெறவேண்டுவது அவசியமென்றும், நன்கு விருத்திசெய்ய வேண்டுமென்றும் சொல்லிமுடித்தார். பிறகு பட்டணம், பிரம்மஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்களும் இந்த பாடசாலையை அபி விருத்திக்கு கொண்டுவரவேண்டிய விஷயத்தில் தமக்கிருக்கும் ஊக்கத்தை நன்றாய்த் தெரிவித்து இது விஷயத்தில் நம்மாலியன்ற வரையில் உதவிசெய்யத் தயாராயிருக்கிறோமென்றும் மற்றுமுள்ள

வர்கள், நேற்றுவரையில் இச்சென்னை இராஜதானிக்கு ஒரு திலகம்போல் இவ்வூரிலேயே விளங்கிக் கொண்டிருந்தார்கள். வெகுகாலமாய் இவ்வூர் வித்வத் சிகாமணிகளால் நிறைந்ததெனக் கருதியே, முற்காலத்திய அரசர்களால் இந்த கிராமம் சர்வமான்யமாக இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இக்கிராமம் கிழக்கிலும் மேற்கிலும், சிவாலயத்தாலும், விஷ்ணு ஆலயத்தாலும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது. புண்யமான காவேரிநதியுடனும், மா, பலா, தெங்கு, பாக்கு முதலிய உத்தமமான பல விருக்ஷங்களோடும், சிறந்தபண்டித மணிகளாலும் அலங்கரிக்கப்பட்டதும் மிகவும் பரிசுத்தமுமான இக்கிராமத்தைப் பார்ப்போர்களுக்கு, சந்தோஷமும், சித்த சுத்தியும், வைராக்கியமும், பரலோகஸாதனத்தை நாம் அனுஷ்டிக்க வேண்டுமென்கிற அவாவும் திண்ணமாய் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

இவ்விதமிருக்கும் இந்த கிராமத்தில் நீலகண்ட சாஸ்திரிகள். என்கிற, ஓர் ஆஸ்திகபிராம்மண பிரபு ஓர் ஸம்ஸ்கிருத வித்யாசாலை ஏற்படுத்த வேண்டுமென்று கருதி சுமார்— 40-வருஷங்களுக்கு முன், வித்யாசாலையொன்றை யேற்படுத்தி, அதில் வேதாத்தியயனம், காவ்ய நாடகாதிகள், வியாகரணம் முதலான பாடங்கள் கற்பிக்கும்படியாக ஏற்பாடுசெய்து, பன்னிரண்டு வித்தியார்த்திகளுக்கு சாப்பாடு, ஜாகை, முதலான சௌகரியங்களும் ஏற்படுத்தி, இரண்டு உபாத்தியாயர்களுக்கும், அவர்களுக்குவேண்டிய சௌகரியமும் செய்துகொடுத்து, கிரமமாய் வித்தைகளை அபிவிருத்தி செய்துவந்தார்கள். இவ்விதம் சகலஜனங்களாலும் புகழப்பெற்று மஹிமையுடன், சிறப்பாய் வெகுகாலம் நடைபெற்றுவந்த இந்த வித்யாசாலையானது மத்தியில் சில வருஷங்களாக அதின் நிர்வாஹகரின் காலம் சென்றுவிட்டபடியால், பெயரால்மாத்திரம் விளங்கிக்கொண்டிருந்தது. இச்சமயத்தில் இதற்காக ஏற்படுத்தியிருந்த மூலதனத்தைச் சிலகனவான்கள் இதற்குமாறான பலகாரியங்களில் விநியோகப் படுத்தவேண்டுமென்று சங்கற்பித்திருந்தார்கள்.

சக்தர்களான ஆஸ்திகர்களும் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இது சம்பந்தமான சில அவசியமான விஷயங்களையும் நன்கு உபந்யஸித்தார்கள். ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் ப. பஞ்சாபகேசசாஸ்திரிகளவர்கள் இவ்வித்யாசாலைக்கு நேர்ந்த இடையூறை விலக்கி, நன்கு நடைபெறச் செய்யவேண்டிய விஷயத்தில் பிரம்மஸ்ரீ மைலாப்பூர் காலேஜ் பிரின்ஸ்பால் வெங்கிடு சுப்பாசாஸ்திரிகளவர்கள் விசேஷசிரத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீபரமேசுவரனுடைய அனுக்கிரகத்தால் இஷ்டசித்தியை யடைந்து மிகவும் சிறந்த இத்தர்மத்தை ஸ்தாபித்தார்கள் என்றும், இனி, ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளுடைய அனுக்கிரகத்தாலும் ஸர்வஜகதீதிற்கு மீசனான ஸ்ரீபகவானுடைய அனுக்கிரகவிசேஷத்தாலுமென் மேலும் விருத்தியடைந்து லோகத்திற்கு க்ஷேமத்தைகொடுக்க வேண்டுமென்கிற இந்த அபிப்பிராயத்தை வடமொழியில் அவர்களாலியற்றப்பட்ட சில சுலோகங்களால் உபந்யஸித்தார்கள். அவைகளில் என் ஞாபகத்திற் கெட்டிய இரண்டு பத்தியங்களையும் இங்கு நிரூபிக்கிறேன்.

श्रीमच्छंकरगुरुवरसहजकृपाभरसुपात्रिता सेयम् ।
सततं विद्याशाला लसतामाचन्द्रतारकं भुवने ॥

किंच,

विवर्धितसदागमं विविधकाव्यचम्पूज्वलं
सुतीक्ष्णमतिविस्तृतप्रथितशास्त्रवादाश्रयम् ।
हिताय जगतामिदं सततधर्मबोधोत्सुकं
विराजतु धरातले विबुधमान्यविद्यालयम् ॥

பிறகு பிரம்மஸ்ரீ ராவ்பஹதூர் அப்புசாஸ்திரிக ளவர்கள் வித்யாசாலை விஷயமாய் விஸ்தாரமாய், தம் அனுபவத்திலுள்ள பல விஷயங்களை சுமார் முக்கால் மணி நேரம் உபந்யஸித்தார்கள். அதன்பிறகு அக்கிராசனம் வகித்த பிரமமஸ்ரீ கே. சுந்தரரா

மஅய்யர் அவர்கள் மிகவும் சிறமப்பட்டு அறிந்துகொள்ளவேண்டிய நுட்பமான சாஸ்த்திரார்த் தங்களையும் தர்ம ஸூக்ஷ்மங்களையும், மற்றும் ஒவ்வொரு தினமும் அநுஷ்டிக்கவேண்டிய வைதிக கர்மாக்களின் தத்வத்தையும் அவைகளின் பயனையும், பின்னும பல அரிய விஷயங்களையும் எல்லாஜனங்களும் சுலபமாய் அறிந்துகொள்ளும்படி எளிய தமிழ்நடையில் நன்குபந்யஸித்து சபையோர்களுக்கு அதிக ஆனந்தத்தை யுண்டுபண்ணினர்கள். முடிவில் பிரம்மஸ்ரீ வெங்கிடு சுப்பாசாஸ்திரிகளவர்கள் அக்கிரா சனதிபதியவர்களுக்கும், வித்வான்களுக்கும், மற்றுமுள்ள சபா ஜனங்களுக்கும் வந்தனம் கூறினர்கள். பிறகு சந்தனம், பலம், புஷ்பம், தாம்பூலம் முதலியவைகள் வழங்கினர்கள். இனி ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்கிரஹத்தால் இந்த வித்யாசாலையானது யாதொரு இடையூறுமின்றி விசேஷமாய் விருத்தியடைந்து எங்கும் அறிவென்னும் கதிரொளியை எப்பொழுதும் பிரகாசிக்கும்படி செய்யுமென்று நிச்சயமாய் நம்புகிறேம்.

சுபம்.

வைதிக வித்யாபிமானி.

ஆசார்யோ பாஸநம்.

ஆர்யதர்ம விருக்ஷத்திற்கு ஆணிவேர்போல் ஆலம்பனமான ஆர்யாவர்த்த பூமியில் ஆசார்யோபாஸநம் என்பது தொன்று தொட்டுவந்த எத்துணையோ தொண்டுகளில் ஆசார்யருக்குச் சிஷ்யன் செய்யும் ஓர் தொண்டாம். ஆசார்ய சப்தார்த்தம் தர்ம சாஸ்த்ரங்களில் பலவகையாகக் கூறப்பட்டிருக்கிறது ; உபாஸநம் என்றால் (மநஸா வாசா கர்மணு) மனதினுலும், வாக்கினுலும், செய்கையினுலும் அவருக்கு நன்மையையே நாடி நிற்றலாம்.

'यस्माद् धर्मानाचिनोति स आचार्यः' ।

எவரிடமிருந்தும் தர்மஸ்வரூபங்களைத்தெரிந்து சேகரித்துக் கொள்கிறானோ சீடன், அவர் ஆசார்யர், என்றார் ஆபஸ்தம்ப மஹர்ஷி.

'उपनीय तु यः शिष्यं वेदमध्यापयेद्द्विजः ।
सकल्पं स रहस्यं च तमाचार्यं प्रचक्षते ॥१४०॥ २-अ. मनु॥'

எந்தவேதியர், சீடனை தன்னண்டைக்கு தருவித்து எல்லா வேதசாகைகளையும், யக்ஞ வித்தையையும், உபநிஷத்களையும் அத்யயந முறையாக கற்பிக்கின்றாரோ அவர் ஆசார்யர் என்றார் மஹாநுபாவர் மனு.

आचिनोति च शास्त्रार्थम् आचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मादाचार्यस्तेन कीर्तितः ॥'

சீடனுக்கு சாஸ்த்ரங்களின் பொருள்களை புலப்படுத்துபவரும், நல்லபழக்க வழக்கங்களில் ப்ரேரணை செய்பவரும், தானும் அனேக தர்மங்களை ஆசரணை செய்பவருமாயிருப்பதால் ஆசார்யர் எனக்கூறப்பட்டார். என்றும் ஓர் மஹர்ஷி நிருபணஞ் செய்திருக்கிறார்.

'अप्यक्षरसाम्यान्निर्ब्रूयात्'

'அக்ஷரங்களின் ஸாத்ருச்யம் மூலமாயும் ஓர் சொல்லின் பொருளைக்கூறலாம்' என்ற ஸ்ரீயாஸ்கருடைய யுக்தியை அநுஸரித்தே மேற் குறிப்பிடப்பட்ட ஸ்மிருதிகளில் மூன்றுவிதமாக 'ஆசார்ய' பதத்தின் பொருள் போதிக்கப் பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. எனவே, இதற்கே, ஆசார்ய பரிசரணம், ஆச்சார்யசிச்ரூஷை. ஸத்குருஸேவநம்? ஸத்குருஸேவை ஆசார்ய பரிசர்யைபோன்ற பெயர்களும் வழங்குகின்றன.

'गुरुशुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा'

குருவுக்குப் பணிவிடைசெய்தும், பூர்ணமாக தக்ஷிணைகொடுத்தும் வித்யைபெறலாம் என்ற நீதிவாக்யம் உபதேசித்திருக்கிறது. தைத்திரீயோபநிஷத்தும் ஆசார்யருக்குவேண்டிய பொருளைக் கொடுத்துவிட்டு, அவரது அநுமதிபெற்று கிருஹஸ்தாச்ரமஞ் சென்று, ப்ரஜைகளைப் பெறவேண்டுமென்று கோஷிக்கின்றது. தாய் தந்தையரையும் ஆசார்யார், அதிதிமுதலோரையும் தேவதையாகவே உபாஸி, என்றும் கற்பிக்கின்றது. சிஷ்யன் செய்யும் உபசரணையால் ஆனந்தங்கொண்டு ஆசார்யர் உபதேசிக்கும் வேத வேதாங்கப்ரவசனமே பின்னால் பயனளிக்கத் தக்க உருவுடன் விளங்கும். ஆசார்யரை ஏன் வணங்க வேண்டும்? மொழிபெயர்ப்புகள் மூலமாக அந்தந்த சாஸ்த்ரங்களை இலகுவாகப் பயின்றுவிடலாமே தாமே! — என்றால்— சின்ன பின்னமாக ஸந்தேஹமயமான இன்னதென்று சொல்லொணாப் ப்ரமஜ்ஞானம் உண்டாகி மனதைப் புண்படுத்துமேயல்லது ஸம்சயமற்ற தெளிவான அறிவு ஒருக்காலும் உதிக்கவேமாட்டாது. ஆசார்யரோ, சீடன் கிருதார்த்தனாகக்கருதி, மனமுவந்து, தமதிஷ்டதேவதையினருளை முன்னிட்டு துருஹமான ரஹஸ்யார்த்தங்களை கசடறக் கற்பிப்பதால் ஐயந்திறப அறிந்துகொள்வான் மாணவன். சில உபநிடத வசனங்கள் இக்கருத்தையே உள்ளங்கை நெல்லிக்கனிபோல விசதமாய் முறையிடுகின்றன. ஆசார்யாநுக்ரஹமின்றி எவனும் தன்னையும் தான் செய்யவேண்டிய கடமைகளையும் கற்றுணரான். சுருதிஸ்மிருதிகளில் எங்கும், குரு, ஆசார்யர், உபாத்தியாயர், ...இவர்களைவிட அன்னையை முதன்மையாகவும், சிறப்பித்தும் விளக்கப்பட்டிருந்தாலும், உற்றுநோக்குங்கால், ஆசார்யருக்கு ஸமமாக யாருமிலர் என்றே கூறவேண்டும்.

'अत्राऽस्य माता सावित्री पिता त्वाचार्य उच्यते।'

இங்கு ஸாவித்ரீதேவி வித்யார்த்திக்கு தாய், தகப்பனே ஆசார்யர் என்று ஓர் மஹர்ஷியும்,

‘स हि विद्यातस्तं जनयति । शरीरमेव मातापितरौ जनयतः ॥’

அன்னையும் பிதாவும், பஞ்சபூதமயமான உடலை உற்பத்தி செய்கின்றனர். ஆசார்யரோவெனில், அவனை வித்யாமயமான உடல்பெற்றவனாக்குகின்றாரன்றோ!

என்றார், ஸ்ரீ ஆபஸ்தம்ப மஹர்ஷி,

‘आचार्यः श्रेष्ठो गुरूणाम्’

உபதேசகர்களுள் சிறந்தவர் ஆசார்யர், என்றார் கௌதமமஹர்ஷி; எவனுக்கு ஆச்சான் அருள் அளவிலாது கிடைக்கின்றதோ, அவனுக்கு அக்ஷராசிகளை அப்யஸிக்க அவச்யமிராது. தானாக ஒவ்வோர் தத்வார்த்தங்களும் ஹஸ்தாமலகருக்குத் தோன்றியதுபோல புலப்படுமாம். தன்னையறிய விருப்புள்ளவன் இந்த ஆசார்யோபஸர்ப்பணம் என்ற உபாஸனார்த்தமாகவே உபநிஷத்தின்படி கையில் கிடைக்கும் ஸமித்துகள், பலங்கள் முதலியவற்றில் ஏதாவது ஒன்று எடுத்துக்கொண்டு குருமூர்த்தி இருக்குமிடஞ்சென்று ஆத்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமேயன்றி, அவரைத் தானிருக்குமிடத்திற்கு கலாசாலை உபாத்யாயரைப்போல் அழைத்துவரச் செய்தலாகாது. ஸ்ரீமத் பகத்வத்கீதையில் இந்த ஆசார்யோபாஸநமானது ஆத்மஜ்ஞான ஸாதனமாயிருக்கின்றமையால் ‘ஜ்ஞானம்’ என்று சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது. எவனுக்கு ஜ்ஞானநேத்ரம் பிரகாசிக்கவில்லையோ அவன் ஊனக்கண் பெற்றிருந்தாலும் அந்தனுக்கு ஸமந்தான். ஆகையால் நாமெல்லோரும் ஆத்மஜ்ஞானம் பெற்று ஜீவன்முக்தர்களாகி ஆனந்தரூபியாக ஆசார்யோபாஸநத்தை அநுதினம் இயன்றமட்டும் செய்வோமாக. சுபம்.

K. A. இராமலிங்க சாஸ்திரி
‘ஸம்ஸ்கிருத காமதேநு’ பத்திராதிபர்.

தர்மம்.

(கஅகூ-வது பக்கத்தொடர்ச்சி).

ஆதல்பற்றியே மனு,

अनाम्नातेषु धर्मेषु कथं स्यादिति चेद्भवेत् ।
यं शिष्टा ब्राह्मणाब्रूयुस्सधर्म स्स्यादशङ्कितः ॥

தர்மமென்பது பிரகாசமாய்த் தெரியாதவிடத்தில் எப்படிச் செய்கிறதென்று கேட்டால் சிஷ்டர்களான பிராம்மணர்கள் எதைச் சொல்கிறார்களோ, அதுதான் சம்சயமில்லாத தர்மம் என்றார். ஆனால் சிஷ்டர்களான பிராமணர்கள் யார்? என்று ஆசங்கைநிகழ அடுத்தபடி,

धर्मेणाधिगतोयैस्तु वेदस्सपरिबृह्मणः ।
ते शिष्टा ब्राह्मणाज्ञेयाः श्रुतिप्रत्यक्षहेतवः ॥

தர்மப்படி சாஸ்திரங்களென்ற அங்கங்களோடுகூடிய வேதம் எவர்களாற் கற்கப்பட்டதோ அவர்கள்தான் சிஷ்டர்களான பிராமணர்கள். சுருதிக்குப் பிரத்யக்ஷக்காரணர்கள் என்றார். இங்கு சிஷ்டர்களான பிராமணர்கள் என்று சொல்வதனால் தர்மத்தைச் சொல்லவேண்டியவன் பிராமணன்தான் என்று மனுவின் அபிப்பிராயம்.

ஆதல்பற்றியே, 8-வது அத்தியாயத்தில் ராஜதர்மத்தைச் சொல்லுமிடத்தில்,

जातिमात्रोपजीवी वा कामं स्यात् ब्राह्मणब्रुवः ।
धर्मप्रवक्तानृपतेः नतु शूद्रः कथञ्चन ॥

ராஜனுக்கு தர்மோபதேசங்களைச் செய்வதற்குத்தகுந்த சிஷ்ட பிராமணன் கிடையாவிடினும் ஜாதிமாத்திரத்தினால் பிராமணனென்று பெயர் இருந்தால்போதும் அவன் கெட்டவனாயினும்

அரசனுக்கு அவன்தான் தர்மம் சொல்லவேண்டுமேயொழிய சூத்திரன் ஒருபோதும் கூடாது என்ருர். இங்கு எவ்விதம் கற்றவனுயினும் சூத்திரன் தர்மத்தைச்சொல்ல யோக்கியனல்ல வென்பதுதான் கருத்தே தவிர, கெட்ட பிராமணன் தர்மம் சொல்லலாம் என்பது விதியல்ல. ஆதல்பற்றியே ஸனத்ஸுஜா தீயத்தில் விதுரன் சிலதர்மங்களை திருதராஷ்டிரனுக்குச் சொல் லும்போது மிக சூக்ஷ்மமாயும் வேதத்தின் ஸாரமாயுமான சில தர்மங்களை திருதராஷ்டிரன் கேட்டதும் விதுரன்,

शूद्रयोनावहं जातो नातोऽन्यद्वक्तुमुत्सहे ।

நான் சூத்திரஜாதியிற் பிறந்தேன். ஆதல்பற்றி அதிகம் வேறு நான் சொல்லமாட்டேனென்று சொல்லிப் பிறகு ஸனத்ஸுஜா தரைத் தருவித்தார் என்று மகாபாரதத்திலுளது. இப்படி யிருக்க, இப்போது தேவஸ்தானம், சத்திரம் முதலிய தர்ம ஸ்தானங்களில் தர்மாதிகாரிகளாய் சூத்திரர்கள்தான் ஏற்படு கிருர்கள். இதனுல் முன்நடந்த தர்மத்திற்கும் இப்போதிருக் கும் நிலமைக்கும் உள்ளவித்யாஸத்தை அறிஞர்களே ஊகிக்கக் கூடும். இத்தகைய சில மேதாவிகள் தர்மமென்ருல் பிராமண னுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று அவர்களே எழுதிவைத் துக் கொண்டார்களென்றும் மற்றவர்களுக்குக் கொடுப்பது தர்மமில்லையென்றும் செய்துவிட்டார்களென்றும் கடவுளின் சிருஷ்டியில் மனிதர்களில் மேல்ஜாதி கீழ்ஜாதி கிடையாதென் றும் எல்லோரும் ஸகோதரர்களென்றும் யாருக்கும் எதையும் கொடுக்கலாமென்றும் சிவசிவ பலவாறு மதங்கொண்டு பிதற்று கின்றனர். இவர்களுக்கு இங்கு பதில் சரியாய்ச்சொல்லவாரம் பித்தால் இவ்விஷயத்தைவிட்டு மாறிவிடுமென்று பயந்து சுருங் கப்பதிலளிப்பாம். இம்மேதாவிகள் கடவுள் சிருஷ்டியில் மனி தர்கள் சிருஷ்டியில்மட்டிலுமா ஏற்றத்தாழ்ச்சியில்லை யென்று ஒப்புக்கொள்கிருர்கள். அவ்விதமே மிருகத்திலும் பக்ஷியிலும் ஒப்புக்கொள்வார்கள். அப்படியாகும்போது பீடாபரிகாரத் திற்காகபசுவுக்குப்புல்போடவேண்டும் அதைக் குளிப்பாட்டிப் பூஜைசெய்ய வேண்டுமென்று சொன்னுல் பசுவுக்குமட்டிலும்

அப்படிச் செய்வானேன் கழுதை புல் தின்னவில்லையா? அதை
ஸ்நானம் செய்வித்து ஏன் அதற்குப் புல்போடக்கூடாது என்
றும் பேதபுத்தியில்லாமற் செய்வார்கள். இனிப் பசுமடம்
என்று கட்டினால் அதில் கழுதைகளையும் அடைக்கலாமென்று
தெரிந்துகொண்டுவிடுவார்கள். வீணாய் இதை வளர்ப்பானேன்,
ஆஸ்திகர்களே! நமது வம்சத்திலுண்டான குழந்தைகள் இனி
மேலாவது இப்படுகுழியில்விழுந்து கெட்டுவிடாவண்ணம் வயி
ற்றுப் பிழைப்புக்காகப் படிக்கும் ஆங்கிலவித்தையோடு நமது
பிராசீன தர்மத்தையும் கூடியவாறு தெரிந்துகொள்ளும்படி
நாம் பாடுபட்டால்தான் நம் ஆர்யவம்சம் தழைத்தோங்குமே
யல்லாது வேறுவழியல்ல. இதுகாறும் சொல்லிவந்ததை மறு
படியும் சுருங்கச்சொன்னால் தர்மமென்பது இந்திரியங்களுக்
குப் புலப்படாதென்றும், அது பிராசீன மகரிஷிகளாலும் அனு
திஸித்தமான வேதசாஸ்திரங்களாலும் சொல்லப்பட்டதுதான்
என்றும் அது ஒருகாலத்திலும் மாறாதென்றும் அதன்படி நட
ப்பவன்தான் இகபரசுகத்தை அடைவானென்றும், மீறினவன்
இப்போது சுகமடைபவன்போற் காணப்பட்டாலும் பிறகு
கூடியசீக்கிரம் கெட்டுவிடுவது பிரத்யக்ஷமென்றும் வேதசாஸ்
திரங்களுக்கு விரோதமாய்ப்பேசுபவன் கடவுளின் ஆக்ஞையை
மீறின பாபியென்றும் அவன் ஒருகாலும் மகாத்மாவாக ஆக
மாட்டானென்றும் அவன் சொன்னதை நலமென்று நம்பின
வன் குருடன் கையைப்பிடித்து வழிநடந்த குருடனென்றும்
சாஸ்திரோக்தமான தர்மப்படி கொஞ்சமேனும் நடப்பவன்
ஒருபோதும் கெடமாட்டான். அவன் மேன்மேலும் ஐசுவரியங்
களையடைந்து பரமக்ஷேமத்தை அடைந்து பரமசுகம்பெறுவா
னென்றும் அவனுக்குத்தான் ஈசனின் அனுக்கிரகம் ஏற்படு
மென்றும் அவனால்தான் உலகம் முன்னுக்குவருமென்றும் அத்
தகைய மகான் எப்போது வரப்போகிறாரென்று நாம் ஈசனை
யே பிரார்த்தித்து வழிபடவேண்டும் என்றும் அவரால்தான்
நம் இந்தியா க்ஷேமமடையப்போகிறதென்றும் கூறி, நீண்ட
இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். சுபம்.

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

நன்றிமறவாமை.

(கக௯உ-வது பக்கத்தொடர்ச்சி)

'பெரியோரைத் துணைக்கொள்' என்றதனால், என்றும் பெரியோரையே நேசிக்கவேண்டும். அவர்கள் நேசத்தை ஒரு பொழுதும் கைவிடலாகாது. பெரியோர்களுக்குக் கோபம் வராதென்று எளிதாகநினைத்து, நெருப்பை முன்றானையில் முடிவதுபோலவும், விஷபரீக்ஷை பண்ணுவதுபோலவும், அவர்கள் விஷயத்தில் அபசாரப்பட்டுக் கோபமூட்டலாகாது.

துறவு மெய்யறிவு ஆசையில்லாமை முதலிய நற்குணமென்னும் அசைவற்ற பெரிய மேருசிகரத்தில் ஏறியிருக்கின்ற சான்றோருடைய கடுங்கோபமானது க்ஷணகாலமேயாயினும், கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் அரிது.

குணமென்னுங் குன்றேறி நின்றார்வெகுளி
கணமேயுங்காத்த லரிது.

महागुणाचलोपरिप्रतिष्ठितात्मशालिनाम् ।
अपि क्षणेन नश्वरं न कोपि कोपमुत्तरेत ॥

என்று பெரியோர்களும் கூறுகின்றனர்.

ஆகையால், மகான்களின் வழியைப்பின்பற்றி யாம் கடைத்தேற வேண்டியிருப்பதால், அம்மகான்களிடம் நன்றியைச் செலுத்துவதும் முக்கியமான கடமையாகும்.

மற்றையோர் செய்நன்றி.

இன்னும், சுற்றத்தார்கள் சினேகிதர் அயலார் முதலானவர்கள், பொருளினால் வாக்கினால் சரீரத்தினால் எவ்வளவு சொற்பமான உதவியைச் செய்தாலும், இது எம்மாத்திரமென்று அற்பமாய் எண்ணாமல், அவ்வுதவிசெய்யப்பட்ட காலம் காரணம் முதலியவைகளைப்பற்றி மிகப்பெரிதாகவே கொள்ளவேண்டும்.

தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்.

परैःकृतामुपक्रियां ह्रसीयसीं तिलादपि ।
प्रथीयसीं धराधराद्विवेकिनस्तु मन्वते ॥

என்று மஹான்கள் கூறுகின்றனர்.

உபஸம்ஹாரம்.

ஆகையால், யதார்த்தமாக ஒரு நன்றிசெய்தார்க்கு, ஆபத்துவந்த காத்தில் பெறுதற்கரிய தமது உயிரையாவது கொடுத்து அக்கடனைக் கழிப்பதுமன்றி, அவ்வொரு நன்றியினிமித்தம் அவர் அனேகம் பிழைகளைச் செய்தாலும் அவைகளையெல்லாம் பாராட்டாமற் பொறுத்துக்கொள்ளலும்வேண்டும்.

ஒருநன்றிசெய்தாரை யுள்ளத்தேவைத்துப்
பிழைநூறுஞ்சான்றோர் பொறுப்பர்.

என்றுஞ் சொல்லியிருக்கின்றதே.

எவ்வகைத் தருமங்களை யழித்தவர்களுக்குமீடேறும் வழியுண்டாம். செய்நன்றியைக் கெடுத்தவர்களுக்கீடேறும் வழியில்லை.

எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றிகொன்ற மகற்கு.

समस्तशास्त्रवन्दितान्महापथाऽच्युतात्मनाम् ।
विधीयते तु निष्कृतिः कृतद्रुहां तु नेष्यते ॥

என்று பெரியோரும் மொழிந்திருக்கின்றனர்.

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

ஆசாரமே முதல் தருமம்.

(விஹாரிணியிலிருந்து.)

அமெரிக்கர் பெருங்குடும்பங்கள் வேண்டுமென்று நாடுவதும், பிராஞ்சுக்காரர் குடும்பங்கள் தேவையில்லையென்றிருப்பதும், நம்மவர் முன்னொரு காலத்தில் மக்கட்பேற்றை வெகுதூரம் மெச்சித் தற்காலம் வேறுவிதமாகப் பேசிக்கொள்வதும் சில நியாயங்களை அனுசரித்து நடப்பவைகள். என்று நாம் விளக்கியிருக்கிறோம்.

இங்கிலீஷ் ராச்சியத்திலும் இவ்விஷயத்தில் தற்காலம் ஏதோ குறைவுகள் காணுவதாகத் தெரிகிறது. ஆகவே ஆங்கிலேய விவேகிகளில் பலர் இதை ஆராய்ந்து, குறைவிருப்பது வாஸ்தவமென்றும், அதற்கு மூலகாரணம் ஆங்கிலேயப் புருஷர் ஸ்திரீகளுள்பட ஆங்கில மகாஜனங்களுக்குள் சனாதன தருமம் குன்றி, அவரவர் மனம்போல நடக்கத் தலைப்பட்டதேயாமென்றும் கண்டு, அதற்குப் பரிகாரமாகப் பின்வரும் விளம்பரத்தை பிரசுரப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது—

பிரிட்டிஷ் தீவுகளிலும் அவற்றின் அதீனமாகியிருக்கும் பெரிய தேசங்களிலும் குடியேறியிருக்கும் ஆங்கில மகாஜனங்களுக்கு, நாஷனல் கவுன்ஸில் செகர்டெரியவர்கள் பிரசுரித்துத் தெரிவிப்பது யாதெனில்.—

இக்காலத்தில் வமிசவிருத்தி விஷயமாக எங்கும் பிரசுரமாகிவரும் கொள்கைகள் வெகு கேவலமாயும், மோசமாயும் எங்களுக்குக் கண்டுவருவதால், அதனால் அனேக அனர்த்தங்கள் விளையுமென்று பயந்து நாங்கள் சில அம்சங்களைக் கீழே குறிப்பிடத் துணிகிறோம். மேற்குறித்த கொள்கைகள் நம்முடைய மதம், ஆசாரம் இவைகளுக்கு விரோதஞ்செய்வது மட்டுமேயன்றி, ஆங்கில மகாஜன சமூகத்திற்கே கேடு விளைவித்துக் காலக்கிரமத்தில் நமதுஜாதியார் க்ஷீணித்துப்போக வகை தேடுவனவாம்.

(பின் தொடரும்)